# துறையூர் நகராட்சி

2018 ஆம் வருடம் ஜுலை மாதம் 23 ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு.கா. பாலகிருஷ்ணன்,
தனி அலுவலர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 23.7.2018 | 01 | நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களது ந.க.எண்.1468/18/திம2, நாள்.13.07.2017 சர்வே எண்.322/2 மூலம் துறையூர் நகராட்சி புதிய நகரளவு எண்.6/17 புதிய வார்டு எண்.E , பிளாக் எண்.7, புதிய நகரளவு எண்.6/17ல் கட்டுப்பட்ட 21 செண்ட் புன்செய் குடியிருப்புக்கான மனைப்பிரிவிற்கான சாலை அமைத்து அனுமதிக்காக திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ந.க.எண்.1468/2018/திம2, நாள்.13.07.2018ல் தான பத்திரம் நகராட்சி ஆணையாளருக்கு ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது. இதன்படி திரு.எஸ்.விக்னேஷ் த/பெ.சுப்ரமணியன் என்பவர் துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் ஆவண எண்.3158/2018 நாள்.16.07.2018ல் மொத்த பரப்பு பாதையும் நகராட்சிக்கு தானபத்திரம் நகராட்சிக்கு ஒப்படைத்துள்ளார்.<br>நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களது ந.க.எண்.1468/திம2 நாள்.13.07.2018ம் தேதி கடிதத்தின் படி திரு.எஸ். விக்னேஷ் த/பெ.வி. சுப்ரமணியன் என்பவர் மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் சாலை விஸ்தரிப்புகள் அனைத்தும் தார்சாலைகளாக அமைத்து அதன் நிழற்படம் (Photograph) சமர்ப்பித்துள்ளார். மேலும் தான பத்திரம் செய்து வழங்கியது மற்றும் மனையில் சாலைகள் அமைந்துள்ள நிழற்படம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2999/2018/பி2)<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மான எண்.422 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 29.6.2018 | 02 | துறையூர் நகராட்சி 1.10.2018 (இரண்டாம் அரையாண்டு) முதல் தொழில்வரி உயர்வு செய்யப்பட்டது. குறித்த அறிவிப்பு கீழ்கண்ட தினசரி பத்திரிக்கையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. | **தீர்மான எண்.423 அனுமதிக்கப்ப டுகிறது.** |

| வ.எண் | விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | தினமலர், திருச்சி பதிப்பு | 5.7.2018 | ரூ.10836/– |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு BRIGHT ADVERTISING CHENNAI நிறுவனம் ரூ.10836/– வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு .**<br>அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம். | |
| 29.6.2018 | **03** | இந்நகராட்சி பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் 2002 ஆம் ஆண்டு காவேரி படுகையில் கிணறு அமைக்கப்பட்டு அய்யம்பாளையம் வழியாக தற்போது நாளொன்றுக்கு சுமார் 24.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் குடிநீரானது நகராட்சிக்கு சொந்தமான 18 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் ஏற்றப்பட்டு 24 வார்டுகளுக்கும் 8 துணை மண்டலங்களாக பிரித்து நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 66 LPCD குடிநீர் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.<br>மேலும் துறையூர் நகராட்சியில் மொத்தமுள்ள 14248 சொத்து வரிவிதிப்புதாரர்களில் 5792 எண்கள் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4582 எண்கள் சொத்துவரி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்கு டுபிட்கோ மூலம் வட்டியில்லா கடனாக ரூ.160.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.13277/2018/WS1, நாள்.19.06.2018–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 29.06.2018 ஆம் தேதியில் நடைபெற்ற ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்து பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் விநியோக முறையை (Distribution System) சரி செய்து அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய விநியோக முறையாக District Metering Area (DMA)–ன் படி மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேலும் இதற்கான செலவினத்தை Project Development Grant Fund (PDGF) or Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.424 அனுமதிக்கப்ப டுகிறது.** |
| 29.6.2018 | **04** | துறையூர் நகராட்சியில் அமைந்துள்ள 60 பூங்காக்கள் பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களின் பொழுதுபோக்கு அம்சமாக பராமரிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் முதற்கட்டமாக 4 பூங்காக்களில் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு பூங்காவினை சுற்றி வேலியமைத்து (Fencing) பாதுகாக்க ரூ.1,00,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:2970/2018/இ1) | **தீர்மான எண்425 அனுமதிக்கப்ப டுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு :**<br>மேற்படி பணியின் செலவினத்தை பொது  நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/–.கா. பாலகிருணணன்,

தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர், (பொ)
துறையூர் நகராட்சி.

# துறையூர் நகராட்சி

2018 ஆம் வருடம் ஜூலை மாதம் 31 ஆம் நாள் செவ்வாய்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திருமதி. து. தமயந்தி,
தனி அலுவலர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 31.7.2019 | **01** | தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110ன் கீழ் ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்போம் எதிர்காலம் பாப்போம் 01.01.2019 முதல் முழுமையாக தடை செய்யவும் மற்றும் 20.07.2018 முதல் அனைத்து அலுவலகங்களில் பிளாஸ்டிக் பொருள் முழுமையாக தடை செய்யவும், அதற்கான நடவடிக்கை அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்தல் தொடர்பாக நகராட்சி அலுவலகத்தில் உபயோகப்படுத்தக்கூடாத பிளாஸ்டிக் / அதற்கு மாற்றான உபயோகப்படுத்தக்கூடிய பொருட்கள் வகைப்படுத்தி அதனை பொது மக்கள் பார்வையிடும் வண்ணம் கண்ணாடி பொருத்தப்பட்ட அலமாரியில் பொதுமக்கள் பார்வைக்கும் வைக்கவும், பிளாஸ்டிக் பொருட்கள் தடை தொடர்பாக அனைத்து அலுவலகங்களிலும் ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் தவிர்ப்போம் எதிர்காலம் காப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர் தயார் செய்து அதனை அனைத்து அரசு அலவலகங்களிலும் பொதுமக்களுக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒட்டவும் மற்றும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு விழிப்பு ஏற்படுத்த வகை செய்யவும், பிளாஸ்டிக் பொருட்கள் தடை தொடர்பாக பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விழப்புணர்வு துண்டு பிரசுர வழங்க வழி வகை செய்திடவும், பிளாஸ்டிக் பொருட்கள் தடை தொடர்பாக பொதுமக்களுக்கு கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி மாணவர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணி நடத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும் பிளாஸ்டிக் பொருட்கள் தடை தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் புகைப்படம் எடுத்து அதனை ஆல்பமாக தயார் செய்யவும் மேற்கண்ட பணிகளுக்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சம் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்தல் பணி தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.426 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>31.7.2019</td>
<td>02</td>
<td>துறையூர் நகராட்சி பொது சுகாதார TN48V0856 வாகனம் தகுதி சான்று பெற பழுது நீக்கம் செய்தமைக்கு 24.07.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலையின் பெயர்</th><th>ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் 12ஏ, பூக்கொல்லை தெரு, தஞ்சாவூர் திருச்சி.</th><th>ரீத்தா ஆட்டோ கேரேஜ் 10, சென்னை பைபாஸ் ரோடு திருச்சி</th></tr>
<tr><td>1</td><td>TN48V0856 வாகனம் பழுது நீக்கம் செய்தல்</td><td>ரூ.1,07,262.00 (–) 590.00 மதிப்பீட்டை விட 0.55% குறைவு</td><td>ரூ.1,25,434.00 (+) 17582.00 மதிப்பீட்டை விட 16.30% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம். மேலும், பொது சுகாதார பணியின் அத்தியாவசிய தேவையை கருதி பொது சுகாதார பணிக்கு மேற்கண்ட வாகனம் அவசியம் தேவைப்படுவதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.427 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.7.2019</td>
<td>03</td>
<td>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண். 2571–2017–ஜெ1–நாள். 28.11.2017ன் கடிதத்தில் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கை பணிக்கு நியமனம் செய்யப்படும் களப்பணியாளர்களை தகுதி வாய்ந்த மனித ஆற்றல் விநியோகம் செய்யும் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒளிமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணி மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br>
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலம் திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண்.58–அ3–2018–நாள்.06.06.2018ன் கடிதத்தில் டெங்கு சிக்குன்குனியா கட்டுப்பாட்டு கொசு ஒழிப்பு பணி தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 18 எண்ணிக்கையில் (demositic breeding checker) களப்பணியாளர்களை நிமனம் செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கையாக ஒவ்வொரு வீடுகளாக சென்று source redaction பணி மேற்கொள்ளவும் மற்றும் கொசு புழு ஆதாரங்களை அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அபேட் மருந்திட்டு அழிக்கவும் முதிர் கொசுக்களை கொசு புகைமருந்து அடிப்பான் இயந்திரங்கள் கொண்டு அழித்திடவும், மற்றும் தெருக்களில் பயனற்ற வகையில் உள்ள டயர்கள், உடைந்த மற்றும் தேவையற்ற பிளாஸ்டிக் தென்னைமட்டை, கொட்டாங்குச்சி, கண்ணாடி பொருட்கள், ஆட்டுஉரலில் தேங்கியுள்ள நாள்பட்ட தண்ணீரை நீக்குதல், மற்றும் அரசு மற்றும் அரசு சாரா தனியார் அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் குடிநீர் தொட்டிகள் சுத்தமாக வைத்துள்ளதை உறுதிசெய்தல், நகராட்சி எல்லைக்குட்பட்ட மருத்துவமனைகளை சுகாதாரமாக வைத்துள்ளதை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கைக்கு 18 களப்பணியாளர்களை நியமித்து கொள்ளவும் மேற்கண்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின்</td>
<td>தீர்மான எண்.428 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>விலைவிகிதப் பட்டியலின் அடிப்படையில் 1.9.2018 முதல் 31.03.2018 முடிய 7 மாத காலங்களுக்கு மனித ஆற்றல் விநியோகம் செய்யும் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒளிமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.14.15 இலட்சம் மற்றும் இப்பணிக்கான விளம்பர செலவினம் ரூ.25000/– ஆக மொத்தம் ரூ.14.40 இலட்சம் மட்டும் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>டெங்கு முன் தடுப்பு நடவடிக்கைக்க 18 களப்பணியாளர்களை மனித ஆற்றல் விநியோகம் செய்யும் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒளிமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.7.2019</td><td>04</td><td>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் கடித ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.23.07.2018–ல் வழங்கப்பட்ட அறிவுரையின் படி துறையூர் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி 1.04.2018 முதல் சொத்துவரி மறு சீராய்வு செய்ய ஏதுவாக அரசாணை (எம்.எஸ்) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.4) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (எம்.ஏ.4) துறை நாள்.26.7.2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>அரசாணை (எம்.எஸ்) எண்.73 நாள்.19.07.2018–ல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்துக்கு மிகாமலும் குடியிருப்பு வாடகை கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் வணிக கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும், சொத்துவரி சீராய்வு மேற்கொண்டு சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை (எம்.எஸ்) எண்.76 நாள்.26.7.2018–ல் குடியிருப்பு வாடகை கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் என்பதை நீக்கம் செய்து இந்த வகையிலான கட்டிடங்களுக்கு குடியிருப்பு கட்டிடங்களுடன் சேர்க்கப்பட்டு 50 சதவீதத்திற்கு மிகாமல் உயர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விபரங்களை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.3139/2018/அ1)</td><td>தீர்மான எண்.429 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>31.7.2019</td><td>05</td><td>துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு அலுவலகங்களில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்போம் எதிர்காலம் காப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய விலையில் பேனர் தயார் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலையின் பெயர்</th><th>நூர் டிஜிட்டல் ப்ளக்ஸ் விலையில் டிசைனிங் (ம) பிரிண்டிங் 40–1, கற்பகம் தியேட்டர் வலதுபுறம் மதுரை</th><th>ஸ்ரீ வேல்முருகன் பிரிண்டர்ஸ் 39, விராலிமலை ரோடு, மணப்பாறை</th><th>கஸ்கர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 12 டி/1, மதுரை ரோடு, மணப்பாறை</th></tr>
</table></td><td>தீர்மான எண்.430 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரோடு, மணப்பாறை | | |
| 1 | ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்போம் எதிர்காலம் காப்போம் 4x3 விலையில் பிரிண்ட் 20 எண்ணிக்கை | 9000/– | 10000/– | 9500/– |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த நூர் டிஜிட்டல் ப்ளக்ஸ் விலையில் டிசைனிங் (ம) பிரிண்டிங் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம். மேலும் இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிகமைக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 31.7.2019 | 06 | துறையூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்படும் கழிப்பிடங்களுக்கு பேசன், சிமெண்ட் (ம) ‘P’ டிராப் வழங்கிட 13.07.2018 வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.431 அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண் | பொருள் விபரம் | AKS ஸ்டீல்ஸ் வள்ளி நாயகம் லாரி சர்வீஸ் 36, ஆத்தூர் ரோடு துறையூர். | சிதம்பரம் ஸ்டீல்ஸ், கார்ப்பரேசன், 94, ஆத்தூர் ரோடு, துறையூர் | VS ஹார்டுவேர்ஸ், சிவன் கோவில் தெரு, பாலக்கரை துறையூர் |
|---|---|---|---|---|
| 1 | அரசு OPC சிமெண்ட் | ரூ.340/–<br>(ஒரு மூட்டை) | ரூ.360/–<br>(ஒரு மூட்டை) | ரூ.350/–<br>(ஒரு மூட்டை) |
| 2 | ஒயிட் பீங்கான் | ரூ.300/–<br>(ஒரு எண்ணிக்கை) | ரூ.320/–<br>(ஒரு எண்ணிக்கை) | ரூ.310/–<br>(ஒரு எண்ணிக்கை) |
| 3 | ‘P’ டிராப் | ரூ.80/–<br>(ஒரு எண்ணிக்கை) | ரூ.100/–<br>(ஒரு எண்ணிக்கை) | ரூ.90/–<br>(ஒரு எண்ணிக்கை) |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த AKS டிரேடர்ஸ், துறையூர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம். மேலும் தூய்மை இந்தியா திட்ட பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று, விலைப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்த AKS டிரேடர்ஸ் துறையூர் அவர்களுக்கு வேலை உத்தரவு

<table>
<tr><td></td><td></td><td>வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.7.2019</td><td>07</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.19 மாருதி நகர் பூங்காவில் இயற்கை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி இடத்தில் உரம் தயாரிக்கும் கூடாரம் அமைப்பதற்கு ரூ.1.50 இலட்சத்திற்கு இந்கா்மன்ற தீா்மான எண்.416 நாள்.29.06.2018ல் நிா்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடா்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 18.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரா் பெயா்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரா்</td><td>மதிப்பீட்டை விட 0.07% குறைவு</td></tr>
<tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரா்</td><td>மதிப்பீட்டை விட 0.05% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரா் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2464/2018/இ1)<br>
அலுவலக குறிப்பு : திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரா் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீா்மான எண்.432 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.7.2019</td><td>08</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.1 தனலெட்சுமி நகர் பூங்காவில் இயற்கை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி இடத்தில் உரம் தயாரிக்கும் கூடாரம் அமைப்பதற்கு ரூ.1.50 இலட்சத்திற்கு இந்கா்மன்ற தீா்மான எண்.415 நாள்.29.06.2018ல் நிா்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடா்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 18.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரா் பெயா்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரா்</td><td>மதிப்பீட்டை விட 0.06% குறைவு</td></tr>
<tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரா்</td><td>மதிப்பீட்டை விட 0.04% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரா் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை</td><td>தீா்மான எண்.433 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>விட 0.06% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2464/2018/இ1)<br><br>அலுவலக குறிப்பு : திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.7.2019</td><td>09</td><td>பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2018–19ன் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.அ9/1947/2018, நாள்.02.07.2018ன் படி துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட RO Plant அமைத்தல் பணிக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>Renla Solutions, Thuraiyur</td><td>மதிப்பீட்டை விட 0.05% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>Vinayagam Computers, Thuraiyur</td><td>மதிப்பீட்டை விட 0.08% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள Renla Solutions ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2351/2018/இ1)<br>அலுவலக குறிப்பு : Renla Solutions, Thuraiyur, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.434 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

ஒம்/–. து. தமயந்தி.

தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர், (பொ)

துறையூர் நகராட்சி.